**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சோளிங்கர், இராணிப்பேட்டை மாவட்டம்.</u>**

**<u>O.S.No.46/2019</u>**

வா.சா. 1 – ரவிசந்திரன் நாள் 15.07.2026

சாட்சி இன்று ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டது. இருதரப்பு வழக்கறிஞரின் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of the Act X of 1873.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

1. என் சொந்த ஊர் என்னவென்றால் பில்லாஞ்சி ஆகும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் எலக்ட்ரீசியன் மற்றும் பிளம்பர் தொழில் செய்கிறேன். நான் பில்லாஞ்சியில் தான் தற்போதும் வசிக்கிறேனா என்றால் ஆம். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான்தான் தாவா சொத்தில் கட்டிடம் கட்டிக் கொடுத்தேன், பிரதிவாதி என்னை காலி செய்ய சொல்கிறார், கட்டிடம் கட்டியதற்கான தொகை வந்தால் தான் நான் கட்டிடத்தை காலி செய்வேன். வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் அரக்கோணம் கூட்ரோட்டில் உள்ளது.

2. அங்கு வீடு மட்டும் உள்ளதா என்றால் வீடு கிடையாது, கடைகள் மட்டும் உள்ளது. பிரதிவாதியின் கணவர் பெயர் என்னவென்றால் சம்மந்தம் ஆவார். நானும் பிரதிவாதியின் கணவரும் நண்பர்களா உறவினர்களா என்றால் அவர் என் நண்பர் தான் அவர் eb அலுவலகத்தில் JE இருந்தார் அப்போது அங்கு சென்று வரும் போது பழக்கமானார். பிரதிவாதியின் கணவர் இறந்தபோது அவரது இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று போன்றவற்றை நான்தான் பெற்றுக் கொடுத்ததாக சொல்வது பொய் பிரதிவாதிக்கு என் மூலமாக மேற்படி சான்றுகளை பெற அவசியம் ஏதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்ப தேவைகளை நான் தான் முன் நின்று செய்து கொடுத்தேன் என்று கூறுவதும் பொய், பிரதிவாதியின் மகள் திருமணத்தை நான்தான் முன் நின்று நடத்திக் கொடுத்தேன் என்று கூறுவதும் பொய் என்றால் சரியல்ல.

3. அந்த கட்டிடத்தை என்னை அழைத்து பிரதிவாதி கட்டிக் கொடுக்க சொன்னார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல, பிரதிவாதியும் அழைத்தார் அவரது மகனும் அழைத்துச் சொன்னார். பிரதிவாதியின் கட்டிடத்திற்கான ஒப்புதல் நான் பெற்றுக் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதியின்

கட்டிடத்தை நான் கட்டிக் கொடுத்ததாக கூறுவதற்கும் கட்டிடத்தை கட்ட நான் ரூபாய் 12 லட்சம் செலவு செய்ததாக கூறுவதற்கும் ஆதாரம் உண்டா என்றால் ஆதாரங்கள் ஏதுமில்லை, ஆனால் பிரதிவாதிக்கு தெரியும். நான் ரூபாய் 12 லட்சம் செலவு செய்ததாக கூறுவதும் பொய் அதற்குண்டான வசதி வாய்ப்பும் என் வசம் இல்லை என்றால் சரியல்ல, நான் தான் செலவு செய்தேன்.

4. பிரதிவாதியின் கட்டிடம் மொத்தம் எவ்வளவு சதுர அடி என்றால் 4200 சதுர அடி ஆகும். ஏறக்குறைய 4200 சதுர அடி கட்டிடத்தை நான் கட்டிக் கொடுத்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல, நான் தான் மேஸ்திரி வேலை செய்து கட்டிக் கொடுத்தேன். பிரதிவாதியின் கட்டிடம் கட்டுவதற்கான செலவுகளை நான் தான் பராமரித்தேன் என்று கூறுவது பொய் என்றால் நான் செலவுகளை பராமரிக்கவில்லை நான் ஆட்களை வைத்து கட்டிடம் கட்டிக் கொடுத்தேன் பிரதிவாதியே தான் செலவுகணக்குகளை பராமரித்துக் கொண்டார். பிரதிவாதியின் கட்டிடத்தில் வாடகை பெறாமல் என்னை வாடகைக்கு வாடகைதாரராக பிரதிவாதி அனுமதித்தார் என கூறுவது பொய் என்றால் சரியல்ல, நான் அவருக்காக கட்டிடத்தை கட்டிக் கொடுத்ததால் எவ்வித வாடகையும் பெறாமல் ஒரு ரூம் மற்றும் ஒரு கடையை என்னை வைத்துக்கொள்ள சொல்லி கூறினார்.

5. இரண்டாம் தளத்தில் வாடகைக்கு இருப்பவரிடம் ரூபாய் 1500 வாடகை தொகையை நானே பெற்றுக் கொள்ள வேண்டும் என பிரதிவாதி என்னிடம் கூறியதாக சொல்வதற்கு ஆதாரம் உண்டா என்றால் இல்லை. பிரதிவாதி அவ்வாறு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கட்டிடத்தில் மூன்றாம் தரப்பினர்களை வாடகைக்கு அமர்த்த நான் தான் உதவி செய்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**